

# சமையல் எரிவாயு பயன்படுத்தும் வீட்டுப் பயனீட்டாளர்களுக்கான பாதுகாப்புக் குறிப்புக்கள்

## செய்யவேண்டியவை



முதலில் பர்னருக்குத் தீ மூட்டுங்கள். பயனீட்டாளர், பர்னருக்குத் தீ மூட்டியதன் பின்னரே தமது அடுப்பின் பர்னரின் மீது சமையல் பாத்திரத்தை வைக்க வேண்டும்.



எல்லா சன்னல்களையும் திறந்து அவ்விடத்தை காற்றோட்டம் வரும்படி செய்யவும்.

SAFETY MARK

பாதுகாப்பு முத்திரை கொண்ட சமையல் எரிவாயு துணைப் பாகங்களை அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடமிருந்து மாத்திரம் வாங்குங்கள்.



எரிவாயு கசிவு இருப்பதாக சந்தேகித்தால் அல்லது சமையல் எரிவாயு தீ விபத்து பற்றி அறிவிப்பதற்கு சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படையை (*SCDF*) 995 என்ற *எண்ணில் அழைக்கவும்.*

## செய்யக்கூடாதவை



கசிவு இருப்பதாக சந்தேகித்தால் (கடுமையான வாசம் இருப்பு போன்றவை) எரிவாயு அடுப்பை இயக்குவதைத் தவிர்க்கவும்.



சமையலை ஒருபோதும் கவனிக்காமல் விடாதீர்கள் அல்லது தீப்பற்றக்கூடிய பொருட்களை திறந்த தீப்பிழம்புகளுக்கு அருகில் வைக்க வேண்டாம்.




ஒரு வீட்டுக்கு அதிகபட்சம் 2 சமையல் எரிவாயு கலன்கள் இருக்கலாம்.

எந்த நேரத்திலும் இரண்டு கலன்களுக்கு மேல் வைத்திருக்க வேண்டாம். கலன்கள் காற்றோட்டமுள்ள தனி அறையில் நிமிர்ந்த நிலையில் வைக்க வேண்டும்.

இது ஒரு சமூகநல முயற்சி:

SCDF The Life Saving Force ... for a safer Singapore

National Fire And Civil Emergency Preparedness Council NFEC

# சமையல் எரிவாயு (LPG)

## பயன்பாடு பற்றிய ஆலோசனை



ஆதரவு:

Esso LPG · SUNGAS · UNION · SingGas · LPG ASSOCIATION

## ஒரு பாதுகாப்பான வீட்டிற்கு வழக்கமாகச் செய்ய வேண்டிய சரிபார்ப்புக்கள்

ஒவ்வொரு முறையும் ஒரு புதிய எரிவாயு கலன் வழங்கப்பட்டு மீண்டும் பொருத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் சமையல் எரிவாயு வியாபாரி உங்கள் சமையல் எரிவாயு முறைமையில் 5-முனை சரிபார்ப்பு மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாதபட்சத்தில் தயவுசெய்து உங்கள் வியாபாரியைத் தொடர்பு கொண்டு அவ்வாறு செய்யுமாறு கூறுங்கள்.

## 5-முனை கட்புலப் பாதுகாப்புச் சரிபார்ப்பு

உங்கள் சமையல் எரிவாயு வியாபாரி, உங்கள் சமையல் எரிவாயு அமைப்பின் முறையான மற்றும் விரிவான கட்புல் சோதனையொன்றை மேற்கொள்வதை உறுதி செய்யவும். 5-முனை கட்புல பாதுகாப்புச் சரிபார்ப்பில் பின்வருவன உள்ளடங்க வேண்டும்:




### சீராக்கி

- தேய்ந்துள்ளதா அல்லது காலாவதியாகியுள்ளதா என்று ஆராயுங்கள்.




### இரப்பர் குழாய்

- தேய்ந்துள்ளதாக என்று பார்த்து சேதமடைந்திருந்தால் உடனடியாக மாற்றுங்கள்.
- குழாய் மீது குறிப்பிடப்பட்டுள்ள காலாவதி தேதியின் அடிப்படையில் புதிய தொகுப்பை மாற்றவும்.




### வாயு உருளை

- எப்போதும் எரிவாயு கலனை நிமிர்ந்த நிலையில் வைக்கவும் மற்றும் அதை படுத்திருக்கும் நிலையில் வைக்க வேண்டாம். ஒவ்வொரு எரிவாயு கலன் தேய்ந்துள்ளதா மற்றும் காலம் கடந்துள்ளதா என்று சரிபார்க்கவும்.




### குழாய் இடுக்கிப் பிடிப்பன்

- குழாய் இடுக்கிப் பிடிப்பன் தளர்வாகவோ அதிகம் இறுக்கமாகவோ பொருத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தவும் (அவற்றினால் இரப்பர் நெளிகுழாயில் இடைவெளி மற்றும் வெட்டுக்கள் ஏற்படக்கூடும்).




### கசிவுப் பரிசோதனை/ கூட்டு இணைப்புக்கள்

- அடுப்புக்கும் சமையல் எரிவாயுக்கும் இடையிலான அனைத்து கூட்டு இணைப்புக்களிலும் தேய்வுகள் மற்றும் சேதங்கள் உள்ளனவா என்று ஆராயுங்கள்.
- தூய்மை செய்யும் பொருள் அல்லது சொப்புக் கரைசலை அவற்றின் மீது பயன்படுத்தும் போது குமிழ்கள் தோன்றினால் அந்த இடத்தில் கசிவு இருக்கிறது.

## உங்கள் சமையல் எரிவாயு உருளையில் சமையல் எரிவாயு பாதுகாப்பு குறிச்சொல்லை உள்ளதா என்று சரிபார்க்கவும்

சமையல் எரிவாயு பாதுகாப்பு குறிச்சொல் சமையல் எரிவாயு வியாபாரிகள் வீட்டுப் பாதுகாப்பு சரிபார்ப்புக்களைச் செய்வதற்கான ஒரு பட்டியலாகும்.

பாதுகாப்புச் சரிபார்ப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் அந்த குறிச்சொல்/சரிபார்ப்புப் பட்டியல் வாயு உருளையில் ஒட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்காவும் வியாபாரி அந்த பாதுகாப்பு குறிச்சொல்லின் மீது தனது நறுவனத்தின் முத்திரையைப் பதிக்க வேண்டும்.





## பயன்படுத்தப்பட்ட சமையல் எரிவாயுவை அகற்றுவது மற்றும் பொது இடங்களில் சமையல் எரிவாயுவை பயன்படுத்துவது.

நீங்கள் பயன்படுத்திய சமையல் எரிவாயு கலனை அகற்ற வேண்டுமாயின் அல்லது வெளிப்புற நிகழ்வுகளில் உங்கள் சமையல் எரிவாயுவை பயன்படுத்த வேண்டுமாயின் (அவை கூண்டுகளில் நிறுவப்பட வேண்டும்), தயவுசெய்து பின்வரும் 24 மணிநேர துரிதஅழைப்புச் சேவைகளின் ஊடாக அவற்றின் வழங்குநர்களைத் தொடர்பு கொள்ளவும்:

| | |
|---|---|
| Esso LPG | 1800 266 2828 |
| SingGas | 6863 4292 |
| SunGas | 6333 5555 |
| Union Energy | 6333 5555 |
| LPG Association | 6280 6612 |